உ: த. குரல் வழி நடத்தல் குழு:—

★ பிரான்ஸ்: திரு. அரிமாவளங்கோ
★ இந்தோனேசியா: திரு. ராமுலு
★ பீசி: திரு. க. அப்பாப்பிள்ளை
★ தென்னாபிரிக்கா: திரு. மு. அன்பன்
அ. சோதிநாதன்
★ தமிழ் நாடு: திரு. இளந்தமிழன்
★ மொறிசியசு: திரு. அ புட்பரதம்
★ மலேசியா: திரு. நாரண. திருவிடச்செல்வன்
★ பர்மா: திரு. ரெ. மாரிமுத்து
★ சிங்கப்பூர்: திரு, சி. இறைவாணன்

உலகத் தமிழர்களே ஒன்றுபடுக!

விலை சதம்: 50

# உலகத் தமிழர் குரல்

குரல்: 2 ‖ தி. பி. 2006 புரட்டாதித்திங்கள் – செப்டம்பர் 1975 ‖ ஒலி: 4

ஆசிரியர்: குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்


## தமிழ்ப் பத்திரிகை இல்லை! தமிழ்ப் பாடசாலைகள் இல்லை!

# பர்மாத் தமிழர்களைக் காப்பாற்றுக!

— ரெ. சண்முகம், பர்மா —

இரங்கூன், 1 செப்

பர்மாவிலிருந்து வெளிவந்த 'ரஸிகன்', 'தொண்டன்' என்ற இரண்டு தமிழ் தினசரிகள் இன்று வெளிவருவது இல்லை! தமிழ்க் குழந்தைகள் தம் தாய் மொழியைப் பயிலத் தமிழ்ப் பாடசாலைகள் கிடையாது! எனவே இங்கு தமிழ் மொழி வளர, தமிழர் தம் கலை, பண்பாடு செழிக்க வாய்ப்பு இல்லை. மாறாக, அவை அழிந்து வருகின்றன! பர்மா நாடெங்கும் சிதறி வாழும் நம் தமிழர்களை எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஏராளம்! தாயில்லாக் குழந்தைகள் போலவும், நடுக்கடலில் திசை தெரியாது செல்லும் நாவாய் போலவும் நாம் தத்தளிக்கிறோம். வயிற்றை மட்டும் நிரப்பிக்கொண்டு வாழ்வதை விடத் தாயகம் சென்றால் போதும் என்று சென்று விட்டோர் பலர். ஏனையோர் - ஏறக்குறைய இரண்டு இலட்சம் தமிழர் இன்று பர்மாவைத் எம் தாயகமாகக் கருதிப் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம். எங்கள் நிலையை உலகத் தமிழர்கள் உணர்ந்து உதவ வேண்டும். உண்மையில் தாயகம் செய்ய வேண்டிய ஒரு புனிதமான பணியை உங்கள் இலட்சிய ஏடான உலகத் தமிழர் குரல் செய்து வருவது கண்டு, பர்மா வாழ் தமிழர்களாகிய நாம் பெருமைப் படுகிறோம்! கைமாறு செய்ய முடியாத நிலையில் நாம் வாழ்ந்து வருகிறோம் உலகத் தமிழரிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்து வரும் உங்கள்ஏடு காலத்தின் தேவையென்பதைத் தமிழ் உலகம் உணர்ந்து கை கொடுக்க வேண்டுமென விரும்புகிறோம்.



முன்னாள் நிலையுணர்ந்து
மூதறிஞர் வாக்கறிந்து
இன்னாள் நிலையறிந்து
ஏற்றமுடன் பன்னாளாய்
நற்றமிழின் நற்பொருளை
நம் முன் நாட்டிவைத்த
வெற்றிநிறை செயல்வீரர்
பர்மா பெரியார்
டி. எஸ். மணி

சிறப்புக்கட்டுரை பக்கம் 4

### ஈப்போவின் தவப் புதல்வன்
### டத்தோ எஸ். பி. சீனிவாசகம் மறைவு!

மலேசிய மக்கள் முன்னேற்றக் கட்சியின் நிறுவனரும் அதன் தலைவரும், மலேசிய நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், அதன் உறுப்பினரும், சட்டமன்றப் பிரதிநிதியும், ஈப்போ நகராண்மைக் கழகத்தில் 14 வருடங்கள் தொடர்ந்து தலைவராக இருந்தவரும், சட்டத்துறை வல்லுனருமான, ஈப்போவின் தவப் புதல்வன் சேனேட்டர் 'சீனி' அவர்களின் மறைவை 'உலகத் தமிழர் குரல்' ஆழ்ந்த கவலையுடன் தமிழ் உலகத்துக்கு அறிவித்துக் கொள்கிறது. புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்த 'சீனி' சகோதரர்கள் பற்றி மலேசியாவில் அறியாதவர்களே இல்லை! சீன மக்களும் மலாய் மக்களும் பெரும்பான்மையாக வாழும் ஈப்போவையும் அதன் சுற்றாடலையும் பல்லாண்டு காலமாக எதிர்க் கட்சியின் கோட்டையாக வைத்திருந்த 'சீனி' அவர்கள், ஈப்போ வில் கட்டப்பட்ட ஒரு பாலத்துக்கு மறைந்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா நினைவாக "அண்ணா பாலம்" எனப் பெயர் சூட்டித் தம் இன, மொழிப் பற்றை வெளிக்காட்டிக் கொண்டவர். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண, தீர்க்கதரிசனமான தம் கருத்தை வெளியிட்டதன் மூலம் ஈழத்தவர் இதயங்களிலும் இடம்பிடித்துக் கொண்ட அன்னாரின் மூதாதையர் இலங்கையைச் சேர்ந்தவர்களென்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டு மைல் நீளமான அன்னாரது இறுதி ஊர்வலத்தில் அரசியல் வாதிகள், பிரமுகர்கள், பொதுமக்களாக ஏறக்குறைய 6,000 மக்கள் கலந்து கொண்டு தமது அஞ்சலியைச் செலுத்திக்கொண்டனர்.

உலகத் தமிழர் சார்பாக, "உலகத் தமிழர் குரல்" அன்னாரது ஆத்மா அமைதி பெறப் பிரார்த்திக்கிறது!

**நாமெல்லாம் ஓர் குடும்பம்! ஆகா! இந்த நயம் மிகுந்த வார்த்தையில்தான் என்ன இன்பம்!**

# மொறிசியசு நாட்டில் நம் தமிழர்கள்

அ புட்பரதம் (மொறிசியசு)

(பங்குனித் திங்கள் இதழ்த் தொடர்ச்சி)

*தமிழர் வருகை!*

மொரீசியசு உரிமை பெற்ற நாடாக விளங்குவதற்கு முன் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தது. ஆங்கிலேயர் இந் நாட்டைப் பிரஞ்சுக் காரரிடமிருந்து 1810-ம் ஆண்டில் கைப்பற்றினர். ஆங்கிலேயர் படையில் Madras Engineers என்னும் படையும் இருந்தது குறிப்பிடத்தக்கது. 'மாகே தேலபூர் தொனெ' என்னும் பிரெஞ்சு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் (1735—1746) புதுச்சேரியிலிருந்து வந்த தமிழர்களின் உதவியும் கொண்டு போர்டு லூயிசு துறைமுகம் கட்டப்பட்டது. ஆகவே, தமிழர்கள் பிரெஞ்சிய ஆட்சியிலேயே சிறு தொகையாக இங்குக் குடியேறி இருந்தனர். இந்நாடு மலைகளும், பல குன்றுகளும் நிறைந்தது. இங்குள்ள பழங்காலக் கட்டடங்களும், கிறிஸ்துவக் கோவில்களும் கற்களால் கட்டப்பட்டவை. இக் கல் கட்டட வேலைகளை மேற்பார்வை செய்து வந்தவர்கள் தமிழ்'மேஸ்திரிகள்'. தலைநகரில் உள்ள முசுலிம் மசூதி, திறைச்சேரி முதலியவை தமிழரின் கட்டடக் கலைக்குச் சான்றாக இன்றும் நிலவுகின்றன.

கரும்புத் தோட்டங்களிலேதான் பெரும்பான்மையான தமிழர்கள் வசித்து வருகிறார்கள். இத் தோட்டங்களில் எங்கும் சிறு சிறு கோயில்கள் இருக்கின்றன. பெரும்பாலும் மாரியம்மன், காளி, துர்க்கை, மதுரை வீரன் கோயில்கள் இவை. இக் கோயில்களுக்கு நிலமும் பொருளுதவியும் கொடுத்திருக்கிறார்கள் பிரஞ்சு



பண்ணை முதலாளிகள். இக் கோயில்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை. தலைநகரில் உள்ள மீனாட்சி அம்மன்கோயில்தான் மிகப் பெரியது. தமிழகத்திலிருந்து வந்த யாரோ ஒரு நகரத்தார் (செட்டி நாட்டார்) கட்டியது. இக் கோயில் தமிழகக் கோயில் கட்டடக் கலையினின்றும்வேறுபட்டது. தமிழகக் கோயில் போன்று நுழைவாயில் கோபுரம் கிடையாது. குமிழ்போன்ற அமைப்புடைய கோபுரம் சந்நதியிலிருந்து எழுகிறது.

(தொடரும்)

## எங்கள் தென்னாபிரிக்க தமிழர் செய்திகள்

— திரு. மு. அன்பன் —

டர்பன், செப் 2

✠ இங்குள்ள சைவ சித்தாந்த சங்கத்தின் ஆதரவில் 500 மக்கள் இருக்கை வசதி கொண்ட மண்டபமும், 800 மக்கள் ஒரே நேரத்தில் இருந்து வழிபாடு செய்யக் கூடிய அரங்கம் ஒன்றும், நூலகம் ஒன்றும் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மணி வைத்து எழுப்பிய கற்றூண் ஒன்றும் திருக்குறள் கழகத்தின் காப்பாளர் திரு. ஓம்பதி ஆச்சாரி அவர்களால் கட்டி எழுப்பப் பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

✠ இந்திய மக்களின் கல்வி வளர்ச்சியை நோக்காக் கொண்டு அமைக்கப் பட்ட இங்குள்ள கல்லூரியில் தமிழ் மொழியும் இப்போது கற்பிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் 9 ஆண்டுகள் கல்வி பயின்று திரும்பிய புலவர் க. சி. கவுண்டர் அவர்கள் இக் கல்லூரி ஆசிரியராகக்கடமையாற்றுகிறார்.

✠ இம்மாதம் மாபெரும் கலைப்போட்டி ஒன்று இங்கு இடம் பெறுகிறது. பல்வேறு தமிழர் அமைப்புக்கள் இதனை ஒழுங்கு செய்து வருகின்றன.

## எங்கள் பீஜித் தமிழர் செய்திகள்


— திரு. க அப்பாப்பிள்ளை —

சுவா, செப் 8

✠ உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பீஜி கிளை அமைக்கப்பட்டு, அதன் கிளைத் தலைவராக திரு. க. அப்பாப்பிள்ளை அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் நடக்கவிருக்கும் பெருவிழாவுக்குப் பிரதிநிதிகளை அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

✠ இங்கிருந்து வெளிவரும் ஒரே தமிழ் ஏடான 'மித்திரன்' பத்திரிகையை நிர்வகித்து தொடர்ந்து வெளியிட ஒரு குழு அமைக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

✠ தமிழ் தமிழின மேம்பாட்டுக்காக உழைத்து வருபவரும், வணிகருமான திரு. ஏ. சி. சுவாமி அவர்கள் கொங் கொங், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, இந்தியா நாடுகளுக்கான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு இங்



கிருந்து அடுத்தமாதம் புறப்படுகிறார். மேற்படி நாடுகளில் வாழும் தமிழ் அன்பர்கள் இவர் வருகையை நன்கு பயன்படுத்தி, பீஜீ வாழ் தமிழரின் இன்றைய நிலையினை அறிந்து கொள்வார்கள் என இங்கு பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தலைநகரில் நடக்கவிருக்கும் பெருவிழாவிலும் இவர் பங்கு பற்றுவார்.





★

வள்ளுவர்

நெறியில்

வையகம்

வாழ்க!

★

அன்பளிப்பு:— "மில்க்வைட்"

யாழ்ப்பாணம்

# 20,000 தமிழர்கள் வாழும் அந்தமான்!

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ''அந்தமான்'' எனும் பெயரைக் கேட்டாலே ஒருவித அச்சம் ஏற்படும். அந்த அளவுக்கு அந்தமானை அச்சத் தீவாக ஆங்கிலேயர் ஆக்கி இருந்தனர்

அந்தமான் என்ற பெயரைக் கேட்டவுடன் அங்கு உள்ள கடுஞ் சிறைக்கூடம், அடர்ந்த காடுகள், கையில் அம்பும் வில்லும் தாங்கிய

## மொழி பண்பாடுகாக்க தமிழ்ச்சங்கம் உண்டு!

நாகரீகமில்லாத பயங்கர காட்டு மனிதர்கள், இவைகள்தான் நம் மனக்கண் முன் தோற்றமளிக்கும். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.

இந்தியா சுதந்திரமடைந்து கால் நூற்றாண்டுகளாகின்றன. இந்த இருபத்தைந்து ஆண்டு காலத்தில் அந்தமானை சுவர்க்க பூமியாக ஆக்க இந்திய அரசு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இதனால் அச்சத் தீவாக இருந்து வந்த அந்தமான் இன்று இச்சத் தீவாக மலர்ந்து வருகிறது

அந்தமான் நிக்கோபர் தீவுக் கூட்டங்களின் பரப்பளவு 8293 சதுர கி மீ ஆகும். இதனுடைய அதிகப்படியான நீளம் 464கி.மீ. அதிகப்படியான அகலம் 51 கி. மீ.

அந்தமான் தீவுக் கூட்டங்களில் உள்ள பெரிய தீவு ''மத்திய அந்தமான்'' ஆகும். இதன் பரப்பு 1536 சதுர கி. மீ. ஆகும்.

அந்தமான் இயற்கைச் செழிப்புள்ள அழகிய தீவாகும்; இங்கு காணப்படும் இயற்கைத் தோற்றங்கள் மனதுக்கு மகிழ்வூட்டுபவை. இந்த இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்தினால் விரைவில் அந்தமான் சொர்க்க பூமியாக மாறும் என்பதற்கு ஐயமே இல்லை.

மீன் வளத்திலும் அந்தமான் முன்னணியில் நிற்கிறது மீன்பிடிக்கும் நவீன அமைப்புகள் கொண்ட

## இளையோர்கரங்களில் தமிழரின் எதிர்காலம்!

விசைப்படகுகளைப் பயன்படுத்தி, மீன் பிடிக்கும் தொழிலை அபிவிருத்தி செய்தால், உள்நாட்டுத் தேவைகளை நிரவல் செய்வதுடன் வெளிநாடுகளுக்கும் பக்குவப்படுத்திய மீன்களை அனுப்பி ஏராளமான அந்நியச் செலாவணியைப் பெறலாம்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மக்கள் அந்தமானில் குடியேறியுள்ளனர். கணிசமான அளவுக்கு தமிழர்கள் அந்தமானில் குடியேறி வாழ்கின்றனர். அந்தமானில் வாழும் தமிழர்களின் நலனைக் காக்க ''தமிழ்ச் சங்கம்'' என்ற ஒரு அமைப்பை நிறுவி திறமையாக பணியாற்றி வருகின்றனர் தமிழர். பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளை இந்தத் தமிழ்ச் சங்கம் போற்றி வளர்க்க சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. தமிழர்களின் உயர்வுக்காகவும் அந்தமான் வளர்ச்சிக்காகவும் தமிழர் சங்கம் ஆற்றிவரும் சிறப்புப் பணிகள் போற்றுதலுக்குரியவையாகும்.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் அந்தமானில் வாழ்ந்தாலும் அனைவரும் தங்கள் இன, மொழி, சமய வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையாக வாழ்வது வரவேற்கத்தக்க புதுமையாகும். ஒருமைப்பாட்டுக்குஒரு எடுத்துக்காட்டாக அவர்கள் வாழ்க்கை அமைத்து மற்ற இந்திய மக்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருப்பதைப் போற்ற வேண்டும்.

அந்தமானில் வாழும் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்குச் சில கருத்துகளை வழங்க விரும்புகிறேன். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அவனுடைய இளமைக் காலம் வசந்த காலமாகும்.

இந்தக் காலத்தில் தான் தனது எதிர்காலத்தை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவன் மிகவும் எச்சரிக்கையாக இருந்து தனது எதிர்காலத்தை வளமுள்ளதாக்கிக் கொள்ள முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்தமானில் வாழும் தமிழர்களின் எதிர்காலமும் அந்தமானின் வருங்காலமும் அந்தமான் வாழ் தமிழ் இளைஞர்கையில் உள்ளது. இதை ஒவ்வொரு தமிழ் இளைஞரும் உணர வேண்டும். கடுமையான உழைப்பு நேர்மை, விடாமுயற்சி ஆகியவைகளின் துணை கொண்டு தாங்களும் வாழ்ந்து, தங்கள் இன மக்களையும் வாழ வைத்து அந்தமானின் புகழ் அகில உலகிலும் பரவச் செய்ய எல்லா தமிழ் இளைஞர்களும் முன்வர வேண்டும் என வாழ்த்துகிறேன். —வி. ஜி. சந்தோசம்

— நன்றி: அந்தமான் முரசு

இதோ ஈழத்தில் ஓர் இணையற்ற தயாரிப்பு

''கோல்டன் ஹாட்ஸ்''

விருந்து உபசாரத்திற்கும் உல்லாசப் பயணத்திற்கும்

★ கொக்டெய்ல் மிக்சர்
★ டெவில்ட் பீனட்ஸ்
★ கொக்டெய்ல் பிஸ்கட்
★ கஜு நட்ஸ்

சுவைமிக்க உணவுப் பண்டங்கள் தயாரிப்பாளர்கள்

P. D. ஞானம் சகோதரர்கள்
736, திருமலை வீதி,
மாத்தளை.

கிறீன் ஹவுஸ் கூல் பார்

எங்களிடம் குளிர் பானங்கள் மற்றும்

வீரகேசரி, மித்திரன், ஈழநாடு, உலகத் தமிழர் குரல், குமுதம், கலைமகள், கல்கி, ஆனந்த விகடன்

போன்ற பத்திரிகைகள் சஞ்சிகைகள் பெற்றுக் கொள்ளலாம்

நல்லூர் சந்தை — யாழ்ப்பாணம்

உரிமையாளர்: க. சண்முகராஜா

பர்மா தமிழர் சீர்திருத்த செம்மல்

# திரு. டி. எஸ். மணி

## அவர்கள் பிறந்த தின விழா!

இரங்கூன் செப் 18

பர்மா தமிழரிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி, தமிழ்ச் சமுதாய மேம்பாட்டுக்காகத் தன் வாழ் நாளையே அர்ப்பணித்து வரும் பர்மா தன்மான இயக்கத் தலைவர் திரு. டி. எஸ். மணி அவர்களது 57-வது பிறந்த தின விழா இங்கு அறிஞர் அண்ணா அறிவகத்தாலும் ஏனைய அமைப்புக்களாலும் மிகவும் விரிவான அடிப்படையில் கொண்டாடப்பட்டது. 'இவர் போன்ற பொது நலவாதிகள் பர்மாவில் தோன்றியிருக்காவிட்டால் உண்மையான தமிழர்களையும் தூய தமிழையும் கண்டிட முடியாது போய் இருக்குமென' திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக (மோல் மேன்) பொதுச் செயலாளர் திரு. கா. இரத்தினம் அவர்களும், 'பர்மாவில் எங்கெங்கே தமிழ் உணர்ச்சி தவழ்கிறதோ, எங்கெங்கே சீர்திருத்தம் பேசப்படுகிறதோ அங்கெல்லாம் திரு. டி எஸ் மணி அவர்களது பெயர் ஒளி வீசும்'' என அறிஞர் அண்ணா அறிவகச் செயலாளர் திரு. வீ. இளங்கோவன் அவர்களும் 'பர்மியத் தமிழர் சரித்திரத்தோடு திரு. டி. எஸ். மணி அவர்கள் வாழ்வு இணைந்து விட்டது'' என, அனைத்து பர்மா அறிவகத் தலைவர் திரு. அறிவழகன் அவர்களும் ''பொன், பொருள், புகழ், பதவி, இவைகளை உதறித்தள்ளிச் சமுதாய சீர்திருத்தப் பணியில், சாதி ஒழிப்பில் நல்ல பல சாதனைகளைப் புரிந்த பெரியார்'' என பர்மா திராவிடர் கலாச்சாரக் கழகச் செயலாளர் திரு. கா. கலைமுத்து அவர்களும் ''தூங்கிக் கிடந்த பர்மாத் தமிழினத்தைத் தட்டி எழுப்பித் தன்மான உணர்வூட்டிய தகைமையாளர் என்பதால் பர்மா ''தன்மான இயக்கத் தலைவர்'' என்ற பட்டத்தை வழங்குகிறோம்'' என அறிஞர் அண்ணா அறிவக மகளீர் பகுதிச் செயலாளர் செல்வி. த. காவேரி அவர்களும் அன்னார் புகழ்பாடிப் பல்லாண்டு வாழ வாழ்த்திச் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டுக் கௌரவித்துள்ளனர்.

(எங்கள் பர்மா உடன் பிறப்புக்களின் உயர்வுக்காக உழைத்துவரும் அண்ணல் திரு. டி. எஸ். மணி அவர்களை உலகத் தமிழர் சார்பாக 'பல்லாண்டு வாழ்ந்து எமது பர்மாத் தமிழர் நலனைக் காத்திடுக!'' என வேண்டி வாழ்த்துகிறோம்.

—ஆசிரியர் உ. த. குரல்

# சிறப்பு மலர்!

எமது மார்கழி இதழ் ஒரு சிறப்பு மலராக வெளிவரவிருக்கிறது! மலரில் இடம்பெற படங்களை, புதிய தகவல்களை உடனடியாக அனுப்பிவைக்கும்படி கடல் கடந்த நம் உடன் பிறப்புக்களை வேண்டுகிறோம். விளம்பரங்கள் பெற்று அனுப்பி எமது புனித இலட்சியம் வளர உதவுமாறு ஈழத் தமிழர்களை வேண்டுகிறோம்.


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

இரா. கனகரத்தினம்,
49, Colombo Street, Kandy, Ceylon.

ம. இ. கா. மகாநாட்டில்

# மலேசியப் பிரதமர்!

கோலாலம்பூர் பெடரல் ஹோட்டலில் நடைபெற்ற மலேசிய இந்தியர் காங்கிரசின் 23-வது பேராளர் மகாநாட்டுக்கு மலேசியப் பிரதமர் மாண்புமிகு. துன் அப்துல் ரசாக், ஆளும் கூட்டணியின் ஏனைய கட்சித் தலைவர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பித்தனர். பிரதமருக்கு ம. இ. கா. மகளீர் வண்ணமலர் தூவ, நாதஸ்வர மேள தாளம் முழங்கச் சிறப்பு வரவேற்புத் தரப்பட்டது. ம. இ. காவின் தேசியத் தலைவர், அமைச்சர் மாண்புமிகு டான் ஸ்ரீ மாணிக்கவாசகனார் அவர்களாகும். அமைப்பின் தேசியப் பதவிகளுக்கான போட்டி மிகவும் விறு விறுப்பான முறையில் நடைபெற்றது. சட்டத்துறை துணை அமைச்சர், சேனேட்டர், டத்தோ ஆதி நாகப்பன் ம. இ. காவின் துணைத் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ச. சாமி அவர்களும், மேலவைத் துணைத் தலைவரான டான் ஸ்ரீ உமையதுல்லா அவர்களும், டாக்டர் வே. கணேசன் அவர்களும் உதவித் தலைவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். ம. இ. கா வின் வரலாற்றிலேயே முதல் தடவையாகக் கட்சியின் மத்திய செயற் குழுவுக்கு ஒரு பெண் — திருமதி. மீனும்பாள் ஆறுமுகம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். ''நம்முடைய நான்கு வேட்பாளர்களும் கடந்த தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் மலேசிய இந்தியர்களின் ஏகப்பிரதிநிதிகளாக நாங்களே இருக்கிறோம். இன்று எமக்கு சுமார் ஒரு இலட்சத்து இருபது ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட மொத்தம் 460 பதிவு பெற்ற கிளைகள் உண்டு'' எனப் பேராளர் மகாநாட்டின் தலைமையுரையின்போது திரு. மாணிக்கவாசகம் அவர்கள் தெரிவித்துக் கொண்டார். ''ம. இ. கா. புரணமைப்பானதிலிருந்து மகத்தான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அது தன் ஒற்றுமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டி வந்திருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். இது நமது கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு பெரும் ஊக்குவிப்பாகும். தேசிய முன்னணியிலுள்ள பங்காளித்துவக் கட்சிகளைப் பிளவு படுத்தும் தேச விரோதிகளின் முயற்சிகளை முறியடிக்க, நம்மிடையே ஒருமைப்பாட்டை பலப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என்று மலேசியப் பிரதமர் அவர்கள் இம் மகா நாட்டில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.



எங்கள் மலேசியத் தமிழர் செய்திகள்

திரட்டித் தருபவர்:

தமிழ்த் திரு.
நாரண திருவிடச் செல்வன்

**எமது நன்றி!** ''உலகத் தமிழர் குரல்'' இம் முறை புதுப் பொலிவு பெற உதவிய உ. த. கு. தமிழக வழிநடத்தல் குழு உறுப்பினர் எங்கள் இளந்தமிழன் அவர்களுக்கும் விளம்பரங்கள் பெற்று உதவிய-உதவி வரும், திரு. சண்முகநாதன் (நல்லூர்), திரு. சிவயோகம் பிள்ளை (மாத்தளை), திரு. அரியரத்தினம் (கண்டி) அவர்களுக்கும் இதயம் கனிந்த **எமது நன்றி!!**

இப் பத்திரிகை, கண்டி செட்டி கார்டன்ஸ் 128/8—ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் இரா. கனகரத்தினம் அவர்களால் கண்டி, 98, திருகோணமலை வீதியிலுள்ள, சென்றல் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 27-9-75-ல் வெளியிடப்பட்டது.